1990 ஏப்ரல் 2]

பத்ற்கு நாளும் குறிக்கப்பட்டு, அதற்கிடையிலே கழக அரசு கலைக்கப்பட்ட காரணத்தால், அது தடைப்பட்டுப் போயிற்று. அதற்குப் பிறகு, மீண்டும் ஆட்சி வந்ததற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மண்டபத்தைப் பார்வையிட்டார்கள். இப்போது கட்டுகின்ற பணியினை உடனடியாக ஆரம்பிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு காலத்திலே அது கட்டி முடிக்கப்படும் என்று தெரிந்து கொள்ள நான் விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது, முன்னாள் சட்டப் பேரவையினுடைய தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களுடைய முயற்சியிலே, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. பாதி வேலைகள் முடிந்து விட்டன. அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 12 ஆண்டுக் காலம் கட்டி முடிக்கப்படாத அந்தத் திருமண மண்டபம், அந்த நிலையிலேயே இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அது மேலும் கட்டி முடிக்கப்படுவதற்கு ரூ. 6 இலட்சம் செலவு ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வேலை ஒரு மாத காலத்திலே தொடங்கப்பட இருக்கிறது. 6 மாத காலத்திற்குள்ளே அந்த வேலை முடிக்கப்படுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கோவிலுக்கு நிரந் தரமாக வருமானம் வருகின்ற வகையிலே, அந்த மண்டபத்தோடு இணைந்த கடைகளைக் கட்டுகின்ற திட்டத்தை நீங்கள் நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தத் திட்டத்தில் இதுவும் சேர்ந்து இருக்கிறதா அல்லது சேர்க்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9.35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கடைகளையும் சேர்த்து கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆனால் இப்போதுள்ள திட்டத்தில் அது சேர்க்கப் படவில்லை. மிகப்பெரிய கோவிலாக அது இருந்தாலும், அங்கே இரண்டு கால பூஜைக்கு கூட வருவாய் சரியாக இல்லாத நிலை இருக்கிறது, முதல் கட்டமாக இப்போது திருமண மண்டபத்தின் மூலமாக வருவாய் வரட்டும். இரண் டாவது கட்டமாக கடைகளைப் பற்றிச் சிந்திப்போம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம்.

*5921 திரு. க. சொ. கணேசன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1990 ஏப்ரல் 2

கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி, கந்தசாமி : தலைவர் அவர்களே,

ஆம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட ஒரு மிகப்பெரிய கோவில் கோபுரம் இருக்கிறது. அந்தக் கோபுரத்தைப் பார்ப்பதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நிறைய பேர்கள் வருகிறார்கள். அவர்கள் வந்து பார்வையிடுகிற போது, தங்குவதற்கு ஏதுவாக இப்போது போதுமான இடவசதி இல்லை. ஆகவே, அரசு அங்கே சுற்றுலா மையம் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து எங்களுடைய கவனத்தில் இருக்கிறது. அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக ஒரு விடுதி கட்ட வேண்டுமென்றால், அதற்கான நிலம் வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கேயுள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து தருவார்களானால், உடனடியாக அந்த விடுதி கட்டி முடிக்கப்படும்.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் பார்த்துக் கொடுத்தால் சீக்கிரம் கட்டி முடிப்பதாகச் சொன்னார்கள், எவ்வளவு சீக்கிரமாக வேண்டுமானாலும் இடம் பார்த்துக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். எனவே, அதைச் சீக்கிரம் அரசு முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடையம் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம் துவக்குதல்.

*5021 திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரிபட்டி, பரம்பு ஆகிய இடங்களில் புதிதாக சத்துணவு மையம் துவக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?